சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஸூ ஆவணி மீ 26 ஆம் உ
(1889)

பிரதி விலை: ரூபா 12
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சாதனம்

(HINDU ORGAN)

சிவமயம்

புத்தகம்: 112 | விஷு வருடம் தைத் திங்கள் 15 ஆம் நாள் (28-01-2002) தைப் பூரணை | இதழ்: 10

## புதிய பஞ்சதள இராஜகோபுரம் அமைப்பு

### திருத்தொண்டர் அறுபத்துமூவர் திருவுருவங்கள் பிரதிட்டை

### சிறப்புடன் நடந்தேறிய

## வண்ணை வைத்தீஸ்வரர் - தையல்நாயகி அம்மை திருக்கோவில்

# மகா கும்பாபிஷேகம்

## நல்ல அறிகுறி என அடியவர்கள் குதூகலிப்பு

**யாழ்ப்பாண நகரத்தின் இருதயமெனப் போற்றப்படுவதும் அந்நியர் ஆட்சிக் காலத்தில், சைவசமயம் நலிவுற்றிருந்த போது, நாவலர் பெருமானின் சமயக் கல்விப் பணிகளுக்கு ஆதரவு நல்கி, யாழ்ப்பாணத்தில் சைவ, தமிழ் வளர்ச்சிக்குக் கேந்திரநிலையமாக விளங்கியதுமான வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் (நேற்று) தை மாதம் பதினான்காம் நாள் (27-01-2002) ஞாயிற்றுக்கிழமை பூர்வ பக்க சதுர்த்தசி திதியும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய, முற்பகல் 10 மணிக்கும் 11 மணிக்கும் இடைப்பட்ட, சுப வேளையில் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.**

ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையிலான இருபதிற்கும் மேற்பட்ட குருக்கள்மார்கள் கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர். புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுரத்திற்கும் நவமாசப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள திருத்தொண்டர்கள் அறுபத்துமூவர் திருவுருவச் சிலைகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. நாட்டில் சமாதான முயற்சிகள் தீவிரமடைந்திருக்கும் இச்சமயத்தில் பெருஞ் சாந்தியாகிய இக் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது நல்லதொரு அறிகுறி எனச் சைவப் பெருமக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

### வைத்யேச மகம் மகேசம்

சந்த் ரார்த்த சூடம் சசிவர்ண தேகம்
பணாமணேர்ப் பூஷண பூஷிதாங்கம்
பாலாம்பிகாயா: பதிம் அக்நி நேத்ரம்
நமாமி வைத்யேச மகம் மகேசம்.

இளம்பிறைச்சந்திரனைத் தலையில் சூடியிருப்பவரும் தேகமுழுவதும் வெண்மையான விபூதியை அணிந்திருப்பவரும் சர்ப்பராஜனைச் சிரசில் தரித்திருக்கின்றவரும் பாலாம்பிகை என்கின்ற தையல்நாயகியின் தலைவரும் அக்கினியை நெற்றிக்கண்ணாக உடையவருமாகிய ஸ்ரீவைத்தியநாதன் என்கின்ற பரமசிவனை நான் வணங்குகின்றேன்.

# ஆறுமுகநாவலர் முதல் பண்டிதமணி வரை சைவம் வளர்த்த சான்றோர்கள் - (14):

# சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

(புத்தகம் 112, இதழ் 9 இன் தொடர்ச்சி)

## பேச்சாற்றல்

பெரியாரின் பேச்சாற்றல் தனித்துவமானது. அதுபற்றி இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்:

''பெரியார் அவர்களின் சமயப் பிரசங்கம் ஒன்றைக் கேட்க நேர்ந்தது. பிரமித்துப் போனேன். ஒவ்வொரு சொல்லையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. பிரசங்கம் செய்யும் போது பெரியார் அவர்களின் நிலை பிரத்தியேகமானது. தேக அசைவின்றி மெல்ல எழுந்து நிற்பார். அங்கவஸ்திரத்தால் தோள்கள் மறைந்தும் மறையாமலுமிருக்கும். மார்பின் மேற்பகுதி தெரியும். கைகள் ஒன்றன்மேலொன்றாய் மார்பை அணைந்து மடங்கியிருக்கும். எந்த அவயவமும் அசைவதில்லை.''

''கணித பாடம் போலப் பிரசங்கம் ஆரம்பமாகும். சில வினாடியில் ஒரு அம்ச முடிவில் இலக்கிய இரசனை சொட்டும். சபை குதூகலிக்கும்.''

''இவ்வாறே மேலும் இரண்டொரு முறை நடந்தபின், சபை தம் வயமானதன் மேல் விஷயங்கள் விரிந்து விளங்கப்படும். நியாயித்து நிச்சயிக்கும் இடங்களில் பெரியாரின் மார்பை அணைந்திருக்கும் வலக்கைச் சுட்டு விரல் சற்றே வளைந்த நிலையில் சிறிதே அசைந்து விஷய நிச்சயத்தை வலி செய்யும்.''

''இடையிடையே சபை குதூகலிக்கும் போது பெரியாரின் நிலையும் முக பாவமும் வெகு சிறப்பாயிருக்கும். சபையார் குதூகலிக்கும்போது தாமும் சேர்ந்து குதூகலிக்காமல் சபையை உற்றுநோக்கியபடி மௌனமாய் நிற்பார்கள். அப்பொழுது பெரியாரின் முகத்தில் ஒரு ஒளி தவழும். அது 'ஈத்துவக்கும் இன்பத்தின்' விளைவு. வறியவர்களின் முகம் மலரக் கொடையாளியின் முகம் மலர்வதொரு நிலை''

''ஒரு முறை சைவ மகாநாடொன்றில் பெரியார் அவர்கள் தலைமை வகித்து ஒவ்வொருவர் பேச்சுக்கும் வழங்கிய குறிப்புரை பேசியவர்களையும் சபையாரையும் பிரமிக்கச் செய்தது. உண்மையில் பிரசங்கம் முழுவதும் பெரியாரின் பிரசங்கமாகவே இருந்தது. ஆயினும், பேசியவர்கள் தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்ளத்தக்க வகையிலும் இருந்தது ஒரு தனிச் சிறப்பு''

''கந்த புராணத்தில் சுக்கிரனுபதேசம் பேசும்போது ஏகான்மவாதமாகிய மாயாவாதம் பற்றி வருமிடத்தில், ''கிழி கிழியென்று கிழித்திருக்கிறார்'' என்று, கிராமிய நடையில் கச்சியப்பர் பெருமை பேசுவது சுவை சொட்டுவதாயிருக்கும்''.

''தென்மராட்சியில் பெரியார் அவர்கள் பேசுமிடங்களில் பிரசித்தி பெற்ற சின்னத்தம்பிப் போதகரும் அதிபர் ஆபிரகாமும் பயபக்தியுடன் முன்வரிசையிலிருந்து கேட்பது குறிப்பிடத்தக்கது.''

பெரியாரின் பேச்சாற்றல் பற்றி செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான் க. சி. நடராஜன் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

''பெரியாரின் வாக்குவன்மை ஒரு தனித்தன்மை வாய்ந்தது. முதலில் எடுத்துக்கொண்ட பொருளை நன்கு ஆராய்ந்து தெளிவாக மனத்தில் அமைத்துக்கொள்வார்கள். பின் மேற்கோள், ஏது (காரணம்), திருஷ்டாந்தம் (உதாரணம், எடுத்துக்காட்டு) என்று வகுத்து வகுத்துப் பேசுவார்கள். அவர் பேச்சு தர்க்க ரீதியாக அமைந்திருக்கும். அந்தப் பேச்சு அமைதியான நீரொழுக்குப் போன்று செல்லும். இலக்கியச்சுவையும் நகைச்சுவையும் கலந்திருக்கும். சபையில் அமைதி நிலவும். அவர்கள் ஒரு தனியழகு வாய்ந்த சொற்பொழிவாளர். பொருள் பொதிந்த சொற்பொழிவாக அவர்கள் பேச்சு அமைந்திருக்கும். பயனற்ற எதனையும் அவர்கள் பேசார்கள். எந்தப்பெரிய குழப்பம் இருந்தாலும், அவர்கள் அமைதியான எழுந்து நின்று ஆரவாரமின்றிப் பேசத் தொடங்கியதும் சபையில் நிசப்தம் நிலவும். அஞ்சாது ஒரு பாற்கோடாது. நடுநின்று பேசும் ஆற்றலும் அவர்பாற் கண்டதுபோல வேறு எவரிடமும் யான் கண்டதில்லை''.

சைவப்பெரியார் அவர்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்புச் செய்வதிலும் மிக்க சமர்த்தராக விளங்கினார். பேசுகின்றவருடைய பேச்சைவிடச் சைவப்பெரியாருடைய மொழிபெயர்ப்பு இனிமையாக அமைந்திருக்குமெனப் பல அறிஞர்கள் பாராட்டியுள்ளனர். நீண்ட ஆங்கிலச் சொற்பொழிவொன்றைப் பூரணமாகக் கிரகித்து வைத்துக் கொண்டு, அப்பேச்சு முழுவதையும் அது முடிந்த உடனேயே தமிழ் மொழி பெயர்ப்புப்போல் திரட்டிக் கூறும் உன்னத சக்தியைப் பெரியார் கொண்டிருந்தார். அவ்வுன்னத சக்தியை யாழ்ப்பாணம் கண்டுகொண்ட ஒரு நிகழ்வைப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

''ஒரு முறை (இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த) சுவாமி சர்வானந்தா யாழ்ப்பாணம் வந்தார். அவர் இராமகிருஷ்ணரின் சீடர். விவேகானந்தருக்கு அடுத்த படியில் பிரசங்க மழை பொழிபவர்.

சுவாமிகள் பிரசங்கம் இடிமுழக்கத்தோடு கூடிய பாரிய விடாமழைபோன்றது. மணித்தியாலக்கணக்கில் பேசுவார்கள். மூன்று மணித்தியாலப் பேச்சுமுண்டு. சுவாமிகள் பேசியபின் ஆங்கிலம் தெரியாதவர்களுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பு நடக்கும். சுவாமிகள் அப்படிச் சொன்னார்கள், இப்படிச் சொன்னார்கள் என்று ஏதேதோ சொல்லப்படும். சொல்லுவோர் பெரும் புள்ளிகளாயிருக்கலாம். மொழிபெயர்ப்பு வாய்ப்பாயிருப்பதில்லை. தமிழ் மாத்திரம் தெரிந்தவர்கள் கூட இருந்து கேட்பதில்லை. இதனைக் கண்ணுற்ற சிலர், நமது பெரியார் அவர்களை மொழி பெயர்ப்புக்கு அமர்த்தினார்கள்;

(15ம் பக்கம் பார்க்க)

உ

# திருவுருவ வழிபாடு

— பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் —

தன்னை விரும்பி வழிபடுவோருக்குத் தன்னருட் காட்சியைக் கொடுக்கும்பொருட்டு இறைவன் உறையும் இடங்கள் திருக்கோயில்களாகும். சைவசமயத்தில் திருக்கோயில் வழிபாடு என்பது சமய ஒழுக்கத்துக்கு நிறைவுதரும் ஒரு அங்கமாகும். ''வழிபாடு'' என்ற சொல் ''தொழுதல்'' என்ற பொருளிலேயே பெரும்பாலும் இன்று வழங்கப்படுகின்றது. காட்டிய வழியில் பின்பற்றி நடத்தலே ''வழிபடுதல்'' எனப்படும். அதனால் ஆலயங்கள் தூலமாயும், சூக்குமமாயும் காட்டும் வழிகளில் நடப்பதே—அவற்றைப் பின்பற்றி ஒழுகுவதே உண்மை வழிபாடு என்று பெயர் பெறும்.

மனிதனுக்கு ஆன்மீக அறிவை ஊட்டி வளர்ப்பதற்காக அமைக்கப்பட்ட ஆலயங்களில், அவனது அறிவு, இச்சை, செயல் ஆகிய மூன்றிற்கும் நிறைவு தரும் மூவகை முறைகள் இருப்பதைக் காணலாம். ஆலய அமைப்பு முறை, ஆராதனை முறை, தரிசன முறை என்பனவே அவையாகும்.

ஆலயக் கட்டடங்கள்—அதன் பல அங்கங்கள் — மண்டபங்கள் — பிரகாரங்கள் முதலியனவும். அங்குள்ள திருவுருவங்கள் (விக்கிரகங்கள்) அவற்றிற்குரிய இடங்கள், யந்திரங்கள், பிரதிட்டைகள் முதலியனவும், அவை அமைக்கப்பட்டிருக்கும் விதங்களும் ஆலய அமைப்பு முறையைச் சார்ந்தனவாம்.

அர்ச்சகர் ஆலயங்களில் செய்யும் பூசை முறைகள் — கிரியைகள் ஆராதனை முறையதாம். ஆலயத்தில் அடியார்கள் சென்று வழிபடும் முறை தரிசனம் எனப்படும்.

இம்மூன்று முறைகளும் தனித்தனியே அறிகுறிப்பொருள், அருள் நெறிப்பொருள், அனுபவப் பொருள் என மூவகைப் பொருள்களைக் கொடுப்பனவாம்.

அறிகுறிப்பொருள் அடியார்களுடைய அறிவைப் பெருக்குவது, அருள நெறிப்பொருள் அடியாருடைய இச்சையைப் பண்படுத்துவது; அநுபவப் பொருள் அடியார்க்கு மன அமைதியையும். சாந்தியையும ஆன்ம வளர்ச்சியையும் — முன்னேற்றத்தையும் அளிப்பதாம்.

**திருவுருவ வழிபாடு:**

திருக்கோயில் திருவுருவ வழிபாடு தனி ஒரு மனிதனுக்கென உருவாகவில்லை. மக்கள் அனைவருஞ் சென்று வழிபடுவதற்காகத் தோன்றியவையே அவையாகும். மக்களின் எண்ணிக்கைத் தொகை பெரிது. ஆயின் அவர்களுள் பெரும்பாலானோர் அறிவு நிலையின் அடித்தளத்தையும் அணுகா—அறியா நிலையிலுள்ளனர். இந் நிலையிலுள்ளோர் எளிதாய் விளங்கி வழிபடும் முறைக்கு ஏற்ப அமைந்த சாதனங்களே சைவக் கோவிற் திருவுருவங்களாகும்.

குணங்குறியற்ற இறைவனைக் குணங்குறிகளால் வகுக்கும் எல்லைக்குள் வைத்துப் புறத்தோற்றங் கொடுத்து, எமது கட்புலனுக்குள் அடங்கச்செய்யும் முயற்சியின் விளைவே நாம் காணும் — வழிபடும் திருவுருவங்கள். உருவமற்ற இறைவன் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு, அவர்கள்மீது உண்டான கருணை மேலீட்டால், அருள் பாலித்தற்காகக் காலத்திற்குக் காலம் உருக்கொள்கின்றான். அப்படியாக அவன் பல வடிவங்களில் வந்து நின்று அருள் பாலிப்பதனால் திருவுருவங்களும் பல திறத்தனவாகின்றன பலதரப்பட்டவர்கள் நிலைக்கும், அவர்களது எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்றவாறு வழிபடுவதற்கு அமைவாக இத்திருவுருவங்கள் பலவகைப்பட்டு விளங்குவனவாகும். சாதாரண மனித அறிவால் உணர்ந்துகொள்ள முடியாத இறைவனை அறிய வகையறியாது தடுமாறும் பக்குவப்பட்ட பெத்தான்மாக்களுள் விவேகமும், பக்குவமும், உடையவர்களது வழிபாட்டிற்கு உரியது சிவலிங்கத்திருமேனியாம. இப்படியான சிவலிங்கத் திருமேனியை உணரும பக்குவம் இல்லாதவர்களது வழிபாட்டுக்கு உரிய திருவுருவம் கை, கால் முதலிய உறுப்புக்களுடன் கூடிய உருவத்திருமேனிகள ஆகும் என்பது ஞானநூல் வல்ல பெரியோர் கருத்து.

தொன்றுதொட்டே இத்திருவுருவ வழிபாடடு முறை நம் சைவ சமயத்தில் நிலவி வருகிறது. பழம் பெரும் நாகரிக நகரங்களாக விளங்கி, இன்று அழிந்திருக்கும் மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகர அகழ்வாராய்வின்போது சிற்சில இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட தெய்வத் திருவுருவச் சிலைகளே இக்கருத்திற்குச் சான்றாகும்.

திருவுருவங்கள் இறைவனை நினைவு கூர்ந்து. மனதால் உணர்ந்து கொள்வதற்குத் துணை நிற்பதோடமையாது, அவன் பெருமையினை அறிவதற்கும் உதவியாக விளங்குகின்றன.

(அடுத்த இதழில் தொடரும்)

## வைத்தீச மகாலிங்கம்

நதியரவு மதியிதழி புரிசடை யவிழ்த்துநட நண்ணுமா காச லிங்கம்
நால்வருக் குக்கலா னிழலினல் லுபதேசம் நவிலுற்ற மவுன லிங்கம்
நிதிபதித னன்புடைத் தோழனா யிசான நிலைநின்ற வேட லிங்கம்
நிவாதமுறை யிருவர்க் கழற்கப்ப வடிவாகி நின்றெழுஞ் சோதி லிங்கம்
துதிதுதிக் கையாலன யன்பொடும் போற்றிடுஞ் சுயம்பான வப்பு லிங்கம்
துப்யவுணர் வோரிதய கமலா லயத்திலெழு சுடர்போற் கொழுந்து லிங்கம்
மதிதவழு மதிலோடு கோபுரந் திகழ்வுறும் வண்ணையெல் லையினிறுத்தும்
மாதங்க புரிவைதயல் பாகமிசை மீதமரும் வைத்தீச மகா லிங்கமே.

# செய்தித் தொகுப்பு

### ★ நல்லை ஆதீனக் கலாமண்டபத் திறப்பு:

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலாமண்டபம் தைமாதம் ஐந்தாம் நாள் (18-01-2002) வெள்ளிக்கிழமை முற்பகல் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளால் ஆதீன மரபுகளுக்கமையத் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் குருமூர்த்தி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றதன்பின், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பல்லக்கில் எழுந்தருளி, நல்லைக் கந்தன் வீதி வழியே ஆரோகணித்து, நல்லூர் கமலாம்பிகா சமேத கைலாசநாதர் கோவிலை (நல்லூர் சிவன் கோவில்) சென்றடைந்தார். அங்கும் விசேட பூசை, ஆராதனைகள் நடைபெற்ற பின், சம்பந்த சுவாமிகள் அங்கிருந்து கலாமண்டப வாயிலுக்கு எழுந்தருளினார். கலாமண்டப வாயிலில் கோபூசை நடைபெற்றது. தொடர்ந்து நவக்கிரகபிரீதித் தானங்கள் வழங்கப்பட்டபின், மண்டபம் ஆதீன கர்த்தரால் திறந்து வைக்கப்பட்டது. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் மண்டப மேடையில் ஆரோகணித்திருக்க தீபாராதனை, வேதபாராயணம், திருமுறை பாராயணம் ஆகியன நடைபெற்றன. தொடர்ந்து விருந்தினர் உரைகள் இடம்பெற்றன. அன்று மாலையும் பின்னர் தொடர்ந்து பத்துத் தினங்களும் முத்தமிழ் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### ★ அன்னையர் இல்லங்கள் கையளிப்பு வைபவம்:

இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவன உதவியுடன் கந்தரோடையில் அமைக்கப்பெற்ற அன்னையர் குடியிருப்பு இல்லங்கள் எதிர்வரும் 10-02-2002 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டு ஐந்து விதவைகளுக்குக் கையளிக்கப்படவிருக்கிறது. செஞ்சொற்செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெறும் வைபவத்தில் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இல்லங்களைத் திறந்து வைத்து அவற்றுக்குரிய ஆவணங்களைக் கையளிப்பார்.

### ★ புண்ணியநாச்சியம்மையார் தினம்:

புண்ணியநாச்சியம்மையார் தினம் சைவபரிபாலன சபையாரால், சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் 19-02-2002 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவிருக்கிறது. சபை உபதலைவர் சைவபூஷணம், சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. க. இராசதுரை அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சபையாரால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர்களின் பண்ணிசைக் கச்சேரிகளும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசை சார்பாக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர்களின் சொற்பொழிவுகளும் பிரம்மஸ்ரீ கு. சிவராசசர்மா அவர்களின் விரிவுரையும் பரிசு வழங்கல் நிகழ்வும் மகேசுர பூசையும் இடம் பெறும்.

உ
சிவமயம்

## சைவசமயப் பெருநாட்கள்

### (தைப் பூரணை முதல் மாசிப் பூரணை வரை)

| | | | | |
|---|---|---|---|---|
| தை | 15 உ | (28-01-2002) | திங்கள் | பூரணை விரதம், தைப்பூசம் |
| | 19 உ | (01-02-2002) | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 27 உ | (09-02-2002) | சனி | சனிப்பிரதோஷ விரதம் |
| | 29 உ | (11-02-2002) | திங்கள் | அமாவாசை விரதம் |
| மாசி | 01 உ | (13-02-2002) | புதன் | மாசி மாதப்பிறப்பு |
| | 04 உ | (16-02-2002) | சனி | சதுர்த்தி விரதம் |
| | 06 உ | (18-02-2002) | திங்கள் | ஷஷ்டி விரதம் |
| | 07 உ | (19-02-2002) | செவ்வாய் | கார்த்திகை விரதம் |
| | 13 உ | (25-02-2002) | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | 14 உ | (26-02-2002) | செவ்வாய் | நடேசரபிஷேகம் |
| | 15 உ | (27-02-2002) | புதன் | பூரணை விரதம், மாசிமகம் |

உ

# சைவபரிபாலன சபை
## தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் - 17

*(புத்தகம் 112, இதழ் 9 இன் தொடர்ச்சி)*

### கல்கத்தாப் பிரவேச பரீட்சை

இந்து உயர்நிலைப் பள்ளியிலிருந்து கல்கத்தாப் பிரவேச பரீட்சைக்கு 1895 ஆம் ஆண்டு தோற்றிய பதினாறு மாணவருள் கொக்குவில் K. செல்லையா, சுதுமலை C. பெருமாள்பிள்ளை என்பவர்கள் முதல் வகுப்பிலும், தலையாளி ந. சபாபதி, கொக்குவில் சு. வீரவாகு, நல்லூர் S. P. சரவணமுத்து, பருத்தித்துறை க. சுப்பிரமணியம் என்பவர்கள் இரண்டாம் வகுப்பிலும், தலையாளி பொ. தம்பித்துரை, ச, சிதம்பரப்பிள்ளை, கந்தர்மடம் வை. விசுவலிங்கம், உடுவில் J. R இராசையா (Mann) என்பவர்கள் மூன்றாம் வகுப்பிலுமாகப் பத்துப்பேர் சித்தியடைந்தனர்.

### F. A. வகுப்பு ஆரம்பம்

இந்து உயர்நிலைப் பள்ளியில் கலையில் முதலாம் ஆண்டு (First in Arts) வகுப்பு இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு, 1895 ஆம் ஆண்டு ஆனி மாதம் 24 ஆம் நாள் F A. வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக B. A. பட்டதாரியான திரு. வி. கதிரவேற்பிள்ளை என்பவர் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். மேல்நாட்டு அனுபவமும் பிரித்தானிய பல்கலைக்கழகப்பட்டமும் உடைய வொருவரை ஆசிரியராக நியமிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 17-09-1895 ஆம் ஆண்டு கௌரவ பொன். குமாரசுவாமி அவர்கள் இந்து உயர்நிலைப்பள்ளி முகாமையாளராகிய திரு. சி. நாகலிங்கம் அவர்களுக்கு எழுதிய கடிதமொன்றில் "...... It is important to have anEnglish Master. We shall discuss this when I talk with you. ......" எனக் குறிப்பிட்டிருப்பது மூலம் அறியலாம்.

### கட்டடத் திறப்புவிழா

மன்மத வருடம் ஆவணித் திங்கள் எட்டாம் நாள் (23-08-1895) வெள்ளிக்கிழமை இரவு பூர்வபக்க திருதியை திதி, அத்த நட்சத்திரம், சுகர்மநாம யோகம், வணிச கரணம் கூடிய சுபமுகூர்த்தத்தில் கட்டடப் பிரவேசம் சைவாசார முறைப்படி நடைபெற்றது. பிரவேசம் நடந்த போது இராசி, அம்ச நிலைகள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| ராகு | இராசி சக்கரம் | | வியா |
| | | | சூ-செ பு-கே |
| | | சனி | சந் செவ் |

| | | | |
|---|---|---|---|
| | ராகு | வெ | சூரி |
| | அம்ச சக்கரம் | | சந் |
| | | | ல வி |
| சனி | | செவ் கேது | புதன் |

இதன் பின்னர் (28-09-1895) ஆம் நாள் சனிக்கிழமை இரவு கட்டடத்தை சம்பிரதாய பூர்வமாக சட்ட நிருபண சபை அங்கத்தவரான ஸ்ரீமான் பொன்னம்பலம் குமாரசுவாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்; இதுபற்றிய இந்து சாதனம் செய்தியின் ஒரு பகுதி பின்வருமாறு:

"...... ஸ்ரீ குமாரசுவாமி முதலியாரவர்களைச் சென்ற சனிக்கிழமை இரவு ஒன்பது மணியளவில் (சைவபரிபாலன) சபையார் மேளவாத்தியம், தீவர்த்தி, இரட்டைக் குதிரை வண்டி முதலிய விருதுகளோடும் வாண வேடிக்கையோடும் பறங்கித் தெருவிலிருந்து அழைத்து வந்தனர். குமாரசுவாமி முதலியார் அவர்கள் அங்கு வந்து, முதல் வெள்ளித் திறவுகோல் கொண்டு கதவைத் திறந்து பிரவேசஞ் செய்தனர்கள். (இத்திறவுகோல் பசுபதிச்செட்டியார் வழங்கியதாகும்). அப்பொழுது வேதகீதங்களும் கரதல கோஷங்களும் செய்யப்பட்டன. அதற்கு முன் இப் பள்ளிக்கூடத்தின் மேல் வீடும் கீழ்வீடும் ஒருசேர அலங்கரிக்கப்பட்டிருந்தன. கொண்டாட்டம் அனைத்தும் கீழ் வீட்டிலேயே நடந்தன. குமாரசுவாமி முதலியார் தமது மைத்துனர் ஸ்ரீ நமச்சிவாய முதலியார் குமாரர் இரத்தினசபாபதி அவர்களோடு வந்தனர். அவ்விருவருக்கும் உயர்ந்த ஆசனமொன்று கற்பிக்கப்பட்டிருந்தது. அதில் அவ்விருவரும் ஏறியவுடன் சைவபரிபாலன சபையார் ஸ்துதிப் பத்திரமொன்று எழுதி வாசித்தனர். (இப்பத்திரத்தை வாசித்தவர் திரு. அ. சபாபதி அவர்களாவர்).

இக்கட்டட நிர்மாணிப்பில் ஸ்ரீமான் பசுபதிச்செட்டியார் அவர்களின் பங்களிப்பைப் பற்றிப் பின் கண்டவாறு கூறப்பட்டுள்ளது: "Mr S. T. M. Pasupathy Chettiar ...... a gentleman who worked harder than anybody else and was solely responsible for the planning and putting up the buildings ......".

தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறிய ஸ்ரீமான் பொ. குமாரசாமி அவர்கள் நாவலர் பெருமான் வழிநின்று சைவபரிபாலன சபை தொடங்கியுள்ள கல்விப் பணியைப் பாராட்டியதுடன், தம்முடைய கொழும்பு பொன்னம்பலவாணேசுவரர் பெயரால் ஆயிரம் ரூபாவும் தம்முடைய பெயரால் ஆயிரம் ரூபாவும் சபைக்குக் கொடுக்க உடன்பட்டு, அதன் வட்டியை இப் பள்ளியில் தமிழிலே சைவநூற் கல்வியில் தேறும் பிள்ளைகளுக்கும் ஆங்கிலக் கல்வியில் தேறும் பிள்ளைகளுக்கும் கொடுத்து வருமாறு கேட்டுக் கொண்டார்.

### இந்துக்கல்லூரி புத்தகசாலை (Hindu College Book Depot)

சைவபரிபாலனசபை நிருவாக சபைக்கூட்டத்தில் ஸ்ரீ. சித. மு. பசுபதிச்செட்டியார் அவர்கள் முன்

(12ம் பக்கம் பார்க்க)

# வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் கோபாலச் செட்டியார் திருமகனான வைத்திலிங்கச் செட்டியார் என்பவரால் இற்றைக்கு இருநூற்றுப் பதினொரு வருடங் களுக்கு முன் (கி.பி 1790) கட்டுவிக்கப்பட்டது.

கோபாலச் செட்டியார், ஒல்லாந்தர் அரசு செய்யும் காலத்தில் தமது மனைவியாரோடு சோழநாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து, இங்கேயே குடியாகவிருந்து, ஒல்லாந்த அரசினரின் மொழி பெயர்ப்பாளராக இருந்த கொச்சிக் கணேசையர் என்னும் பிராமணரிடம் உத்தியோகம் பார்த்து வந்தார். அவர் யாழ்ப்பாணம் வந்த காலம் முதல் வேப்பமரமொன்றின் கீழ் விநாயகரை வைத்துப் பூசித்து வந்தார். அவ் விநாயகர் இப்போ வேம்படிப் பிள்ளையார் கோவில் (கடைத் தெருப் பிள்ளையார் கோவில்) எனப்படுகிறது.



அன்றைய தோற்றம்

ஒரு நாள் ஐயரவர்கள் காரணமில்லாமல் கோபாலச் செட்டியாரைக் கண்டித்தபோது செட்டியார் உத்தியோகத்திலிருந்தும் விலகி பலசரக்கு வியாபாரம் செய்து வந்தார். வியாபாரம் செய்யும் காலத்து அவர் ஒல்லாந்த தேசாதிபதி வீட்டிற்கும் பலசரக்குக் கொடுக்கும் வழக்கம் உடையவராயிருந்தார். இவருடைய நேர்மை, ஒழுக்கம், விசுவாசம் முதலிய வற்றால் தேசாதிபதியின் மனைவியார் செட்டியாரிடம் மிகவும் அபிமானம் உள்ளவரானார்.

இந்நாட்களில் இந்தியாவிலிருந்து ஈழம் வந்த கூழங்கைத் தம்பிரான், செட்டியாரிடம் நட்புக் கொண்டு அவருடன் வசித்து வந்தார். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் சித்தாந்த சாஸ்திரத்திலும் மிக்க பாண்டித்தியம் உடையவர். சிறந்த பக்தர். இவர் அங்கு இருக்கும் போதுதான் செட்டியாருக்கு ஒரு மகன் பிறந்தான். புதல்வனைப் பார்த்த தம்பிரான் ஆசீர்வதித்து, 'இவன் பெரும் கருமங்கள் செய்யப் பிறந்துள்ளான். இவனுக்கு வைத்திய லிங்கம் என்று பெயரிடுக' என்றார். அவ்வண்ணமே பெயரிட்டனர்.

வைத்தியலிங்கத்திற்குப் பன்னீராண்டு ஆனது. பையனைத் தந்தை கடையில் விட்டுப் போயினர். அவ் வமயம் தேசாதிபதியின் மனைவி கடைக்கு வந்தார். செட்டியார் எங்கே என்று அவர் பையனை வினவினார். வைத்திய லிங்கம் ஓர் மாதுளங்கனியை அந்த அம்மையிடம் கொடுத்து ஏற்க வேண்டினார். அம் மாதுளங் கனியை அம்மாது உளம் கனிந்து வாங்கினார். போசனம் முடித்து செட்டியாரும் வந்தார். பையன் அவரது மைந்தன் என்று அவர் மூலமறிந்த அம்மை யார், வைத்தியலிங்கத்தைத் தன் வண்டியிலேற்றித் தம் வீட்டிற்கு அழைத்தேகினர். தேசாதிபதிக்குப் பிள்ளை யில்லாமையால், வைத்திய லிங்கம் அவர்களது அரண் மனையிலேயே சுவீகாரப் புதல்வன் போல வளர்ந்தார். அவர்களிடம் ஒல்லாந்த பாஷைபயின்றார். 18வயது வரை தேசாதிபதி வீட்டு வாழ்வே அமைந்தது.

ஒரு நாள் தேசாதிபதி முத்துக் குளிப்பைக் குத்தகைக்கு விடப் போவதைக் கேள்விப்பட்ட வைத்திய லிங்கம் தன் வளர்ப்புத் தாயாரான அம்மையாரிடம் 'அக்குத்தகையை நான் வாங்க விருப்பமுடையேன்' என்றார். அதற்கு உதவி புரிய அம்மையாரை வேண்டினார். உடனே அம்மையார் ஒரு கடிதம் வரைந்து சிறுவனிடம் கொடுத்து கச்சேரியில் தேசாதிபதியிடம் கொடுக்கும்படி கூறினார். தேசாதிபதி முகமலர்ச்சியுடன் வைத்தியலிங்கத்தைப் பார்த்து 'முத்துக் குத்தகை வாங்கப் போகிறாயா? ' என்று வினவ, 'ஆம் ஐயா' என்றான் சிறுவன். பக்கத்தே பிரதான மந்திரியாயிருந்த கொச்சிக்



இன்றைய தோற்றம்

கணேசையர் 'நீயும் குத்தகை வாங்கப் போகிறாயா? ' என்றார் ஏளனமாக. ஐயரின் மனோ பாவத்தை அறிந்த தேசாதிபதி கோபித்து, ஐயரைப் பார்த்து 'குத்தகையை இச்சிறுவன் பெயருக்கு எழுதிப் பிணையாக என்பெயரை எழுதுக' என்றார். ஐயர் அவ்வண்ணமே

(11ம் பக்கம் பார்க்க)

# திருப்புள்ளிருக்கு வேளூர் வைத்தீசுவரன் கோவில்

" பேராயி ரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்திரிபு
ரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே"

என்ற திருத்தாண்டகத்தில் அப்பர் திருப்புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாது காலத்தை வீணாக்கி விட்டேனே எனத் தம்மை நொந்து கொள்கிறார். அத்துணைச சிறப்புகள் மிக்க சிவஸ்தலம் திருப்புள்ளிருக்கு வேளூர். தன்னை அடைந்தார் துயர் தீர்ப்பவனாகிய சிவபெருமான், அடியார்களது தீரா நோய் தீர்த்தருளும் பொருட்டு மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி,

ஸ்ரீ வைத்தியநாதர் என்னும் திருப்பெயர் கொண்டு எழுந்தருளி யிருக்கும் திருத்தலம் திருப்புள் ளிருக்கு வேளூர். இது சோழ நாட்டில் சீர்காழிக்கும் மயிலாடு துறைக்கும் இடையே சீர்காழிக்கு ஐந்து கிலோ மீற்றர் தெற்கே காவிரி நதியின் வட பால் அமைந் துள்ளது. கோவில் அமைந் துள்ள ஊர் வைத்தீஸ்வரன் கோவில் எனவே அழைக்கப்படுகிறது. புகையிரத நிலையத்தின் பெய ரும் வைத்தீஸ் வரன் கோவில் என்பதே.



ஸ்ரீ தையல்நாயகி (வேளூர்)

புள் (சடாயு), இருக்கு (இருக் கு வேதம்), வேள் (முரு கன்), ஊர் (சூரியன்) என்ற நால்வரும் வழிபட்டமையால் புள்ளிருக்குவேளூர் எனவும் சடாயு பூசித்தமை யால் சடாயுபுரி எனவும், வேதம் பூசித்தமையால் வேதபுரி எனவும் கந்தன் வழிபட்டமையால் கந்தபுரி எனவும், சூரியன் பூசித்த மையால் பரிதிபுரி எனவும், அங்காரகன் (செவ்வாய்) பூசித்தமையால் அங்காரக புரம் எனவும், அம்பிகை பூசித்தமையால் அம்பிகாபுரம் எனவும் பல பெயர்கள் உள்ளன. இவை தவிர இறைவன் இக்கோவிலிலே மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி ஆன்மாக் களின் வினையைப் போக்குவதால் வினை தீர்த்தான் கோவில் எனவும் வைத்தீஸ்வரன் கோவில் எனவும் அம்பாள் தையல்நாயகி என்ற நாமத் துடன் கோயில் கொண்டெழுந்தருளி யிருப்பதால் தையல்நாயகி கோயில் எனவும் இத்தலத் திற்குப் பலபெயர்கள் உண்டு.

ஆலயம் ஊரின் நடுவே உயர்ந்த மதில்கள் சூழ கீழ்ப்புறமும் மேற்புறமும் உயர்ந்த இராஜ கோபுரங்களுடன் விளங்குகிறது. ஸ்ரீ வைத்தியநாத சுவாமி சந்நிதானம் மேற்கு நோக்கியும் தையல்நாயகி அம்மையாரின் சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. மேற்கு நோக்கிய சிவஸ்தலத்திற்கும் வடக்கு நோக்கிப் பிரவகிக்கும் நதிக்கும் மகிமை அதிகம் எனக் கூறப் படுகிறது. வருடத்தில் ஆறுநாட்கள் மாலை வேளையில் சூரிய கிரணங்கள் வைத்தியநாத மகாலிங்கத்தின் மேல் விழக் கூடியதாக ஆலயம் அமைக்கப் பட்டுள்ளது.

உயிர்களின் நோய்களைப் போக்கும்பொருட்டு உமையம்மை யார், தையல்நாயகியாய் வடிவு கொண்டு, தைலபாத்திரமும் சஞ்சீவி யும் வில்வமரத்தடி மண்ணும் கொண்டு தம்முடன்வர இறைவன் எழுந்தருளி மருத்துவராகவிருந்து அருள் செய்த சிறப்புடைய தலமாகை யால் இறைவன் வைத்தியநாதர் எனவும் இறைவி தையல்நாயகி எனவும் பெயர் பெற்றுள்ளனர்.

(9ம் பக்கம் பார்க்க)

உ



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

விஷு தை 15 (28 - 01 - 2002)

## நல்ல சகுனம்

திருவண்ணை நகர் வைத்தீஸ வரன் கோவிலில் நேற்று நிறைவேறிய மகா கும்பாபிஷேகம் பல்வேறு துன்பச் சுமைகளைத் தாங்கிக் கொண்டு நலிவுற்றிருக்கும் ஈழத்துச் சைவப்பெரு மக்களுக்குப் பெரியதோர் மன ஆறுதலைத் தந்துள்ளது.

இவ்வாலயத்தின் செழுமையே யாழ்ப்பாணத்துச் சைவ சமூகத்தின் தழைவாகக் கடந்த இருநூற்றாண்டு காலமாக எம்மனோரால் கருதப்பட்டு வந்தது. ஒல்லாந்தர் காலத்தில், சைவாகம விதிப்படி அமைக்கப்பட்ட இவ்வாலயம், பின் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சைவத் தமிழ் வளர்த்த ஆறுமுக நாவலர் என்ற தர்ம சேனாதிபதியின் கோட்டையாகச் செயற்பட இடமளித்த பெருமை யுடையது.

யாழ்ப்பாணத்தவர்களுக்கு சைவ உணர்வு ஊட்டி, யாழ்ப்பாணச் சமுதாயத்திலே பக்திச் சிறப்பினை வேரூன்றச் செய்து, அது பரம்பரை பரம்பரையாக நிலைக்க வழிகோலிய நாவலர் பெருமானது பிரசங்கங்களுக்குக் களமமைத்துக் கொடுத்ததோடன்றி, அவரது முதற் சைவத் தமிழ்ப் பாடசாலையாகிய வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையும் அச்சியந்திர சாலையும் இச் சுற்றாடலில் சில சமயங்களில் இக்கோவில் மடங்களில் - இயக்கியே நிலை கொண்டன.

சைவாகம விதிப்படி அமைக்கப்பட்டு அவ்விதிகளுக் கமைய நித்திய நைமித்திகங்கள் நடைபெற்று வந்த இவ்வாலய வசந்த மண்டபத்தில் கூட்டப்பெற்ற பல கூட்டங்களில் வைத்தே ஆறுமுகநாவலர் பெருமான் பிற ஆலயங்களில் நடைபெற்றுக் கொண்டிருந்த சைவாகம விரோத செயற்பாடுகளைக் கண்டித்தார். நாவலர் பெருமானின் பின், அவரது வழியில் சைவத்தைப் பரிபாலிக்க உருவான யாழ்ப்பாணம் சைவசமய பரிபாலன சபை என்ற அமைப்பு 1890 ஆம் ஆண்டு வண்ணை வைத்தீஸ வரன் கோவில் வசந்த மண்டபத்தில் சேர். பொன். இராமநாதன் முன்னிலை யில் நடந்த இரண்டாயிரம் பேர் வரை கலந்து கொண்ட - மகாசபைக் கூட்டத்திலே சைவபரிபாலனசபை எனப்பெயர் மாற்றம் பெற்று வீறுநடை போடலாயிற்று. சைவபரிபாலன சபையார் நடத்தி வந்த அகில இலங்கைச் சைவ மகாநாடுகளும் அவர்களால் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சகல நற்கருமங்களும் வண்ணை வைத்தீஸ்வரரின் திருவருட்துணை யைத் தலைக்கொண்டே நடத்தப்படு கின்றன. பின் நாட்களில் வைத்தீஸ் வரன் கோவில் வடக்கு வீதியில் வைத்தீஸ்வரப்பெருமான் கிருபையால் அவரது பெயராலேயே வைத்தீஸ்வர வித்தியாலயம் அமைந்தது. இக்கல்லூரியும் சைவத்தமிழ் வளர்ச்சியின் கேந்திர நிலையமாகச் சில தசாப்தங்களின் முன் விளங்கி யது சரித்திரம்.

இவ்வாறாக யாழ்ப்பாண சைவத்தமிழ் வளர்ச்சியின் கேந்திர நிலையமாக விளங்கிய வைத்தீஸ் வரன்கோயிலின் செழுமையில் சமீப காலத்தில் தளர்ச்சியேற்பட்டிருந் தமை, உண்மைச் சைவத்தமிழ் நெஞ்சங்களுக்கு மனக்கடினத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பது களின் பிற்பகுதியில் புதிய இராஜ கோபுரம் அமைக்கும் நோக்கில் அகற்றப்பட்ட "கட்டைக் கோபுரம்" மீண்டும் அமைக்கப்படாதிருந்தமை யும் சைவ சமய வளர்ச்சியின் நாயகர் களாகிய அறுபத்து மூவர் திருவுருவங்கள் பிரதிட்டை செய்யப் படாதிருந்தமையும் பெருங் குறைபாடு களாயிருந்தன.

1970 களில் ஆரம்பிக்கப்பட்ட இராஜகோபுரப் பணிகள் 1980 களின் பிற்பகுதியில் முடிவடையும் கட்டத்தை அடைந்து கொண்டிருந்த வேளையில் - ஆலயக் கோபுரம் போலத் தமிழ் மக்களின் வாழ்வும் உயரும் என நாம் நம்பிக்கை கொண்டிருந்த வேளையில் - 1987 இல் இடம்பெற்ற விமானக் குண்டுத்தாக்குதலினால் ஆலயத்தின் பிரசித்திபெற்ற வசந்த மண்டபமும் இராஜகோபுரமும் சேதத்திற் குள்ளான மையைப் பெரும் அபசகுன மாகவும் வரவிருக்கும் அவலங் களுக்குக் கட்டியம் கூறுவது போலவும் கருதப்பட்டது. மக்கள் கருதியவாறே பேரழிவுகளும் இடம்பெயர்வுகளும் இடம்பெற்றன.


நாட்டின் பெரும் பிரச்சனையான இனப்பிரச்சனைக்குச் சமாதான வழியில் தீர்வுகாணும் முயற்சி தீவிரமடைந்தி ருக்கும் இவ்வேளை யில், இராஜ கோபுரப்பணி பூரணமடைந்து மகாகும்பா பிஷேகம் நிறைவுற்றிருப்பதை நல்லதொரு சகுனமாகக் கருதுகிறோம்; மக்கள் கருதுகின்றனர். இந்நிகழ்வு மக்கள் மனதில் மகிழ்ச்சியையும் நம்பிக்கை யையும் ஏற்படுத்தியுள்ளது. அறுபத்து மூவர் பிரதிஷ்டை செய்யப் பட்டதும் நல்ல தொரு அறிகுறியே.

இந்த நல்ல கைங்கரியம் நிறைவுபெறப் பணியாற்றியவர்கள் அனைவரும் சிறப்பாக - ஆலய அறங்காவலர் - பாராட்டு தற்குரியவர்கள். புகழ்பெற்ற ஆலய வசந்த மண்டபம் புனரமைக்கப்பட்டு அது சைவப்பயிர் வளர்க்கும் உயிர்த்துடிப்புள்ள நிலையமாக மீண்டும் பரிணமிக்கும் போது யாழ்ப்பாணச் சைவத் தமிழ் மக்களின் கௌரவமும் வாழ்வும் இராஜ கோபுரம் போல் வானோங்கி நிற்கும் என்பது எம்மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

இவ்வாலய வசந்த மண்டபம் சைவத்தையும் தமிழையும் வளர்க்குமொரு கேந்திர நிலையமாக மீண்டும் மாறுதற்கு எல்லாம் வல்ல வைத்தீஸ்வரப் பெருமானும் தையல்நாயகித் தாயாரும் திருவருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

**திருப்புள்ளிருக்கு வேளூர் .......... 2ம் பக்கத் தொடர்ச்சி**

இத்தலத்தின் தலவிருட்சம் வேம்பாகும். இது கீழைக்கோபுர வாயிலின் உட்புறம் இருக்கிறது. இது வேம்படிமால் என வழங்கப்படுகிறது. வேப்பமரத் தடியில் ஆதி வைத்தியநாதர் எழுந்தருளியுள்ளார். சித்தாமிர்த புஷ்கரணி (சித்தாமிர்த தீர்த்தம்) இங்குள்ள எல்லாத் தீர்தங்களிலும் முதன்மை யானது. தையல்நாயகி சந்நிதானத



*ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி திருக்கோவில்*

திற்கு எதிரே இருக் கின்றது. சித்தர் கணம் இறைவர் திருமுடியில் அமிர்தத்தால் அபிஷேகித்த போது, அவ்வமிர்தம் வந்து இத்திருக் குளத்தில் கலந்தமையால் இது சித்தாமிர்த தீர்த்தம். என அழைக்கப்படுகிறது.

வைத்தியநாதர் சிறிய சிவலிங்கத் திருமேனியில் உறைந்து மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்து அருள் பாலிக்கிறார். தைலபாத்திர த்தை ஏந்திய தைலாம்பாள் ஆகிய தையல்நாயகித் தாயார் நின்ற கோலத்தில் வழிபடுபவர்களது உள்ளத்தைக் கவரும் வனப்பு மிகுந்த அருட்பொலிவோடு காட்சி தருகிறாள். திருஞானசம்பந்தரும் அப்பரடிகளும் வைத்தியநாதர் மீது தேவாரம் பாடியுள்ளனர்.

இத்தலத்தில் வைத்திய நாதரையும் தையல்நாயகியையும் போலச் சிறப்புற்றிருப்பவர் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி. அவரது சந்நிதி வைத்தியநாதர் சந்நிதிக்கு முன்பாக உட்பிரகார ஆரம்பத்தின் வலது பக்கமாக கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. ஸ்ரீ செல்வ முத்துக்குமரர் வள்ளி தெய்வயானையோடு எழுந்தருளியிருக்கும் அழகுக் காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும். குமரகுருபரர் முத்துக்குமார சாமிப் பிள்ளைத்தமிழ் பாடி இப்பெருமானைப் போற்றியுள்ளார்.

இங்கு இடது வெளிப் பிரகாரத்தின் வடமுனையில் கிருத்திகை அபிஷேகமண்டபம் என ஒரு அழகான மண்டபம் உண்டு. இம்மண்டபத்திலே கார்த்திகை தோறும் ஸ்ரீ செல்வ முத்துக் குமார சுவாமிக்குச் சிறப்பான அபிஷேகம் நடைபெறும். வாழ்வில் ஒவ்வொரு வரும் காணவேண்டிய காட்சி இது. எல்லா அபிஷேகங்களும் நடந்த பின்பு நன்கு அரைத்த நயம் சந்தணக்குழம்பு அபிஷேகம் கண் கொள்ளாக் காட்சியாயிருக்கும். சந்தனாபி ஷேகம் ஆக, முருகனுக்குப் பீதாம்பரம் போர்த்தியது போல் பொலிவும் கம்பீரமும் கருணை பொழியும் கடாட்சமும் நேரில் அனுபவித்தாலே புரியும். தருமபுர ஆதீன மகா சந்நிதானமவர்களின் ஆளுகைக் குட்பட்டதான இக் கோவிலில் மகா சந்நிதானமவர்கள் ஒவ்வொரு கார்த்திகை தோறும் நேரில் வருகைதந்து சந்தனக்குழம்பு அபிஷேகத்தை நடத்தி வைப்பார். பின்னர் சண்முகார்ச்சனை நடக்கும்.

செல்வக்குமரனாதலால், சில முதல் நைவேத்தியங்கள் முருகனுக்கே நிவேதிக்கப்படுகின்றது. மாதந்தோறும் வரும் கார்த்திகை நாட்களிலும் கந்த சஷ்டி போன்ற விசேட காலங்களிலும்தான் செல்வ முத்துக்குமரருக்கு அபிஷேகங்கள் நடைபெறும். மற்றைய நாட்களில் செல்வ முத்துக்குமார சுவாமியின் ஆன்மார்த்த பூஜா மூர்த்தியான ஸ்ரீ முத்துலிங்கத் திற்குத் தான் அபிஷேகம் நடைபெறும். ஸ்ரீ முத்துலிங்கம் பச்சை மரகதத்தினாலானது. ஒவ்வொரு வருடமும் குறித்த சில தினங்களில் செல்வ முத்துக் குமாரர் வாலாம்பிகை கோவில் சென்று பூசை செய்வது இக்கோவிலின் சிறப்புகளுள் ஒன்று. முருகன் சூரன் மார்பைப் பிளக்க வேல் வாங்கியது இத்தலத்திலே தான் எனக் கூறப்படுகிறது.

(10ம் பக்கம் பார்க்க)

திருப்புள்ளிருக்குவேளூர்......
(9ம் பக்கத் தொடர்ச்சி)

அர்த்தஜாமப் பூசையில் செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு வழிபாடு நடந்த பிறகே சுவாமிக்கு (வைத்தியநாதருக்கு) வழிபாடு நடைபெறும். இதற்குப் புழுகாப்பு என்று பெயர். இப் புழுகாப்பு தரிசனம் சிறப்பித்துக் கூறப்படுகிறது. ஸ்ரீ செல்வ முத்துக்குமாரருக்கு அர்த்த ஜாமப் பூசையின் போது சாத்தப்படுவது நேத்திரபிடி சந்தனம் எனப்படும். இச்சந்தனப் பிரசாதம் அணிபவர்களுக்கு நல்ல பலன் களைக் கொடுக்க வல்லது.

இக்கோவிலில் நவக்கிரகங்கள் ஒரேவரிசையில் அமைந்துள்ளது மற்றுமோர் சிறப்பம்சம். கிரகங்கள் வலிமையற்றுப்போகும் இடங்களிலேயே அவை ஒரே வரிசையில் அமையப்பெறும். அங்காரகன் (செவ்வாய்) பூசித்துத் தன் சரும நோய் நீங்கப் பெற்றதால், இது அங்காரக க்ஷேத்திரம் என்றும் போற்றப்படுகிறது. செவ்வாய் தோஷமுள்ளவர்கள் இங்கு வந்து வழிபட்டு நலமடைவர். பிரகாரத்தில் அங்காரகனுக்கு தனி சந்நிதியுண்டு. உற்சவ மூர்த்தியுமுண்டு. வாரம் தோறும் செவ்வாய்க்கிழமை மாலையில் ஆட்டு வாகனத்தில் அங்காரகன் சகல மரியாதைகளுடனும் உள் வீதி உலா வருவார். சடாயுவின் வேண்டுகோட்படி, இராமபிரான் இத்தலத்தில், விபூதி குண்டத் தில், சிதையடுக்கிச் சடாயுவின் பூதவுடலைத் தகனம் செய்த சடாயுகுண்டம் தெற்குப் பிரகாரத்தில் அமைந்துள்ளது. இன்றும் அக்குண்டத்திலுள்ள விபூதியை இட்டுக்கொண்டு பலரும் பலவிதமான பிணிகளிலிருந்து விடுபடுகிறார்கள். வைத்தியநாதரிடத்தில் நோய் நீங்கப் பெறுவதற்காகப் பெறும் மாத்திரை (குளிகை) திருச்சாத் துருண்டை என அழைக் கப்படுகிறது. இக்கோவில் விளக்கு அழகுக்குப் பெயர் பெற்றது. "வினை தீர்த்தான் கோயில் விளக்கழகு" என்பது பழமொழி. இங்கு காமிக ஆகமப்படி நாள்தோறும் ஆறுகாலப் பூசைகள் நடை பெறுகின்றன. பங்குனி உத்த ரத்தை இறுதி நாளாகக் கொண்டு வைத்தியநாதருக்குப் பெரு விழா நடைபெறுகிறது. அதில் ஐந்தாம் திருநாளன்று ஸ்ரீ செல்வமுத்துக் குமாரர் ஸ்ரீ வைத்தி யநாதரைப் பூசித்துச் செண்டு பெறும் காட்சி மிகச் சிறப்பானது. தையல்நாய கிக்கு ஆடிப்பூரம், நவராத்திரி உற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமிக்குத் தைத்திங் களில் திருவிழா நடை பெறுகிறது. தை மாதத்துக் கடைசிச் செவ்வாய் அன்று தீர்த்தத்திருவிழா நிகழும். செவ்வாய்க் கிழமைகளில் மக்கள் கூட்டமாக வந்து சித்தாமிர்த தீர்த்தத்தில் மூழ்கி, சுவாமி தரிசனம் செய்வார்கள். உற்சவ காலங்களில் சுவாமி எழுந்தருளும் போது கயிலையில் சோமாஸ்கந்தர் எழுந் தருளியிருப்பதே போன்று நடுவில் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரர் எழுந் தருளிவர, சுவாமி ஓர் புறமும் அம்மையார் மற்றொரு புறமும் எழுந்தருளுவர். மிகச் சிறப்பாகப் பரிபாலிக்கப்படும் இத்திருக் கோவில் தருமையாதீனத் தின் அருளாட்சிக்குட்பட்டது. வைத்திய நாதர் மீதும் தையல்நாயகி மீதும் செல்வமுத்துக் குமாரர் மேலும் பல புலவர்கள் எண்ணற்ற பாடல்களைப் பாடிப் போற்றியுள்ளனர். ஏனைய கோவில்களில் ஒவ்வொரு மூர்த்திதான் பிரதானமாயமைந்திருக்கும். வைத்தீஸ்வரன் கோவிலில், அப்பன், அம்மை, செல்வமுத்துக் குமரன் மூவருக் குமே சமமான சிறப்பும் முக்கியத்துவமும் மகிமையும் உண்டு. சிதம்பரத்திற்குச் சமீபமாக அமைந்துள்ள இத்தலத்தை வாழ்நாளில் ஒரு தடவையாவது கண்டு வழிபடுதல் பெரும் பேறாகும்.



செல்வமுத்துக்குமாரர்

இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி, இடர்பாவம் கெடுத்து, தெருளாத சிந்தைத னைத் தெருட்டிச் சிவலோக நெறியறியச் சிந்தை தரவல வேளூர் அருளாளனை உருகி நைபவர் உள்ளம் குளிரும்; வாழ்த்துவோர்க்கு இன்பம் வரும்; பற்றல்லார்க்குப் பாவம் பறையும்; விருப்பினால் தொழும் அடியார் வினை வீடும்; தீவினைக் கோர் மருந்தான; புள்ளிருக்கு வேளூர் வள்ளல் பாதம் வணங்கித் தொழுது வாழ்த்தி புள்ளிருக்குவேளூரா எனப் போற்றித் துதித்தது முன்னை வினை தீர்த்தருளும் மன்னவனைக் கீதத்தால் மிகப்பாடிப் பாதத்தைத் தொழுது உய்தி பெறுவோமாக.

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர் மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்
தன்னாய சம்பாதி சடா யென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

*- சம்பந்தர்-*

**வண்ணைவைத்தீஸ்வரன்.....**
6ம் பக்கத் தொடர்ச்சி

எழுதினார். குத்தகையை ஏற்றுக் கிரமமாக நடத்தி ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் இலாபம் பெற்றார். இப்படி மூன்று முறை குத்தகை வாங்கி இலாபமடைந்தார். வைத்தியலிங்கம் முத்துவியாபாரம் செய்யும் காலத்தில் கூழங்கைத் தம்பிரானிடம் கல்வி பயின்றார். இவருடன் கூடிக் கற்றவர்கள் தென்கோவை நெல்லைநாத பண்டிதரும், மாதகல் மயில் வாகனப் புலவருமாவர்.

முத்துவியாபாரத்தில் பெரும் தனவந்தரான வைத்தியலிங்கத் தைக் கூழங்கைத் தம்பிரான் சிவப் பணியில் ஈடுபடத் தூண்டினார்.

வைத்தியலிங்கச் செட்டியார் குடும்பத்தினது குலதெய்வம் திருப்புள்ளிருக்குவேளூர் வைத்திய நாதரும் தையல்நாயகித் தாயாருமாவர். தம்பிரான் செட்டி யாரிடம் "உன்னை இந்நிலைக்குக் கொண்டு வந்த பரமபிதாவாகிய வைத்தியநாதப் பெருமானுக்கும் தையல்நாயகித் தாயாருக்கும் யாழ்ப்பாணத்தில் ஆலயம் அமைக்க வேண்டும்'' என்று கூறினார். செட்டியார் அதற்குச் சம்மதித்தார்.

தம்பிரான் குறித்த நிலத்தை 1787ம் ஆண்டில் வாங்கி அடிக்கல் நாட்டி ஆலயம் அமைத்து 1790ம் ஆண்டு சாதாரண வருடம் சித்திரை மாதம் பூர்வபட்ச சப்தமியோடு கூடிய புனர்பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்வித்தார். நித்திய நைமித்தியம் சிறப்புற நடக்க நிபந்தங்கள் அமைத்தார்.

ஆலயத்தைப் பதினைந்து வருட காலம் தாமே இனிது பரிபாலித்த பின் தமது புத்திரர்களான ஸ்ரீ கோபாலச் செட்டியார், ஸ்ரீ கந்தப்பச் செட்டியார் ஆகியவர்களிடத்து ஒப்புவித்து விட்டுத் தமது அந்திம காலத்தைக் காசியிற் கழிக்க விரும்பி அங்கு சென்று சில காலம் சீவித்த பின் சிவபதப் பேறடைந் தார் எனக் கூறப்படுகின்றது.

பின், கோபாலச் செட்டியார், கந்தப்பச் செட்டியார், பொன்னுச் சாமிச் செட்டியார், வைத்திய லிங்கச் செட்டியார் ஆகியோர் பரிபாலித்து சிலகாலம் வைத்தியலிங்கச் செட்டியாரின் மனைவி யார் திருமதி வை.கண்ணம்மா ஆச்சி அவர்க ளாலும் பின்னர் அவர்களது புதல்வர் கந்தப்பச் செட்டியாராலும் பரிபாலிக்கப் படுகிறது.

நல்லை நகர் ஆறுமுக நாவலர் தமது முதற் பிரசங்கத்தை இவ்வாலய் வசந்த மண்டபத்தி லேயே செய்தார். அவர்களுக்குப் பின் வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளை புராணப் பிரசங்கம் செய்தார். பின் சங்கரசுப்பையர் சுவாமிகள் செய்து வந்தார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன நிறுவுனர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதர் தம்பிரான் ஸ்வாமிகள், துறவு பூணும் வரை முத்தமிழ்மணி சி.எஸ.எஸ. மணிபாகவதர் என்ற பூர்வாஸ்சிரம நாமத்துடன் சமயப் பிரசல்களை இவ்வாலய வசந்தமண்டபத்திலே சேய்து வந்தார்.

சைவத்திற்கும் தமிழுக்கும் நிலைக்களனாக விளங்கியது இவ்வைத்தீஸ்வரன் கோவில் வசந்த மண்டபம் என்றால் மிகையாகாது. கூழங்கைத் தம்பிரான் வைத்தீஸ் வரப் பெருமான் மீது ஒரு தனிக்கவி பாடியுள்ளார். இன்னும் கொச்சிக் கணேசையர் தையல்நாயகி மீது ஊஞ்சலும், அராலி விஸ்வநாத சாஸ்திரியார் வண்ணைக் குறவஞ்ச யும், வட்டுக்கோட்டைக் கணபதி ஐயர் வைத்திலிங்கக் குறவஞ்சியும் பாடியுள்ளார்.

**மகா கும்பாபிஷேகம்........**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வண்ணை வைத்தீஸ்வரன் வோவில் தமிழகத்தின் சிறப்புமிக்க பிரார்த்தனைத் தலங்களில் ஒன்றா கிய தேவாரப் பாடல் பெற்ற சிவத்தல மான திருப்புள்ளிருக்கு வேளூரில் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள வைத்தீஸ்வரப் பெருமானுக்கும் தையல்நாயகித் தாயாருக்கும் வள்ளல் வைத்தியலிங்கச் செட்டியார் அவர்களால் 1970ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட ஆலயமாகும். இருப்பினும் ஆலய அமைப்பில் அது வேளூர் வைத்தீஸ் வரன் கோவில் அமைப்பிலிருந்து வேறுபட்டது. பழம்பெரும் சிவத்தல மான வேளூரில் வைத்திய நாதர் மேற்கு நோக்கியிருந்து அருள்பாலிக் கிறார்.ா ஆகமவிதி முறைகளுக கமைய அமைக்கப்பட்ட வண்ணார் பண்ணைத் திருக்கோவிலில் வைத்தியநாதர் கிழக்கு நோக்கிக் கோவில் கொண்டெழுந்தருளியுள் ளார். வண்ணை வைத்தீஸ்வரருக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற் றுள்ள இச்சமயத்தில் வேளூர் வைத்தீஸ்வர சுவாமி கோவில் சிறப்புகளையும் பெருமையையும் நினைவுக்குக் கொணர்வது நலமெனக் கருதி இவ்விதழின் பெரும்பகுதியை வேளூர், வண்ணை ஆகிய இரு சிவத்தலங்க ளினதும்பெருமையையும் வரலாற் றையும் நினைவு கூர்வதற்கு ஒதுக்கி இவ்விதழை வைத்தியநாதர் தையல் நாயகி பதார விந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

# சைவபரிபாலன சபை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்த தீர்மானமொன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு, Hindu College Book Depot என்னும் பெயரோடு கல்லூரியில் ஒரு புத்தகசாலை 1895 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கி விற்று வந்தார்கள்.

### தமிழக மாணவர்கள்:

1895 ஆம் ஆண்டில் இந்துக் கல்லூரியில் கற்று, கல்கத்தா பிரவேச பரீட்சைக்குத் தோற்றுவதற்காக (தமிழகத்து) திருநெல்வேலியிலிருந்து ஒரு பிராமண குலமாணவனும் திருச்சிராப்பள்ளியிலிருந்து பதினைந்து மாணவர்களும் வந்து இந்துக்கல்லூரியில் படிக்கத் தொடங்கினார்கள்.

### குரு வகுப்பு:

மன்மத வருடம் கார்த்திகை மாதம் ஆறாம் நாள் (20-11-1895) கூடிய சைவபரிபாலனசபையின் நிருவாகசபைக் கூட்டத்தில் ஸ்ரீ. சித. மு. பசுபதிச்செட்டியார் அவர்களால் முன்மொழியப்பட்டு திரு. த. கைலாசபிள்ளை அவர்களால் வழிமொழியப்பட்ட பின்வரும் பிரேரணை ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது: ''பிராமண குருமார் வேளாள குருமார் என்னுமிருதிறத்துக் குருமாருடைய பிள்ளைகளுள்ளும் பிற சைவப் பிள்ளைகளுள்ளும் சிலரைச் சேர்த்து வகுப்பாக்கிச் சைவ சமய நூல்களும் பிற கருவி நூல்களும் கற்பிக்கவும் பிரசங்கஞ் செய்யப் பயிற்றவும் வேண்டும்.''

மேற்கண்ட தீர்மானத்திற்கமைய, சில பிள்ளைகளைச் சேர்த்துச் சமய பாடங்கள் படிப்பிப்பதற்காகக் குரு வகுப்பு என ஒன்று மன்மத வருடம் கார்த்திகை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பிள்ளைகளுக்குத் தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் சமயநூற் கல்வியும் அதற்கு வேண்டிய கருவி நூற் கல்வியும் நீதிநூற் கல்வியும் கற்பிக்கப்பட்டது. இவர்களுக்குக் கற்பித்த பாடங்கள் திருக்குறள், நன்னூற்காண்டிகை, சிதம்பர செய்யுட்கோவை, வருடாதி நூல், கந்த புராணம், சைவசமயநெறியுரை, சம்ஸ்கிருத இரகுவம்சம், சிவானந்த லகரி, அமரம், கிரியாமாலை, அகோரசிவாசாரியார் பத்ததி என்பவைகள். சு. ஏரம்பையர், மு. கந்த தாஸையர், த. கைலாசபிள்ளை என்பவர்கள் ஆசிரியராகவிருந்து கற்பித்தார்கள். இந்துக்கல்லூரிக்கு அணித்தாக வாடகை பெறாது உதவிய செல்வம், அன்னபூரணி என்னும் இரு சகோதரிகளுக்குரிய வீடுகள் இரண்டில் ஏரம்பையரும் காரைதீவு முதலிய தொலையூர்ப் பிள்ளைகளும் தங்கி விடுதி வீட்டிலிருந்து படிப்பித்தும் படித்தும் வந்தார்கள். க. சதாசிவஐயர், அ. இளையதம்பி, சு. சதாசிவஐயர், த. மார்க்கண்டேயஐயர், சு. வேதக்குட்டிஐயர், ந. சிவசுவாமி ஐயர், மு. சோமாஸ்கந்தஐயர் S. சதாசிவஐயர் முதலான முப்பது பிள்ளைகள் இவ்வகுப்பிலே படித்தார்கள். இக்குருவகுப்பை நிருவகித்து நடத்தியவர் ஸ்ரீமான் பசுபதிச்செட்டியாராவார். அக்காதத்தில் ''அதிகாலையில் இவர்கள் அத்தியயனம் பண்ணிய வடமொழி வேத, தமிழ் வேத ஒலியே அயலிலுள்ளாரைத் துயில் நீக்கியது'' என இந்துசாதனம் ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆறாவது மகாசபைக் கூட்டம்

சைவபரிபாலன சபையின் ஆறாவது மகாசபைக் கூட்டம் மன்மத வருடம் மார்கழி மாதம் விக்ரோறியா வாசிகசாலையில் கூட்டப்பட்டது. உபதலைவர் திரு. சி. நாகலிங்கம் அவர்கள் தலைமையிற் கூட்டம் நடைபெற்றது. இரண்டாண்டு அறிக்கையும் சபையைச் சார்ந்த சகல கணக்குகளும் வாசிக்கப்பட்டன. சிவபதமடைந்த திரு. கு. செல்வநாயகம்பிள்ளை அவர்களின் இடத்திற்கு திரு. வே. சின்னையாபிள்ளை அவர்கள் அதிகாரசபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

விக்ரோறியா வாசிகசாலை (Victoria Reading Hall)க்கு இந்துக் கல்லூரியில் ஒரு பக்கத்தில் இடம் கொடுத்து வைத்துக்கொள்வது நல்லது எனத் திரு. அ. சபாபதிப்பிள்ளை கூறிய யோசனை மகாசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### தபால் கந்தோர்:

1896 ஆம் ஆண்டு மாசி மாதம் முதல் இந்துக்கல்லூரியின் ஒரு பக்கத்திலே தபால் பெற்றுக்கொள்ளும் கந்தோர் (Receiving Office) ஒன்று, இந்துக்கல்லூரி ஆசிரியர்களுள் ஒருவராக விருந்த திரு. மா. சபாபதி என்பவரால் நடத்தப்பட்டு வந்தது. (இந்தக் கந்தோரே 1901 ஆம் ஆண்டில் வண்ணார்பண்ணை தபாற்கந்தோராக பரிணமித்தது).

முல்லைத்தீவிலே மாவட்டப் பொறியியலாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திரு மா. சண்முகம் என்பவர் விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்திருந்த போது இந்துக் கல்லூரியைப் பார்வையிட்டு இருநூறு ரூபா உபகரித்தார்.

### கல்கத்தா புகுமுகத் தேர்வு:

1896 பெப்ரவரி மாதம் நடந்த இப்பரீட்சையில் இந்துக் கல்லூரியிலிருந்து சென்ற பத்து மாணவருள் முதலாம் பிரிவில் அ. விசுவநாதன், சி. சுப்பையா என்பவர்களும், இரண்டாம் பிரிவில் த. தம்பிப்பிள்ளை என்பவரும், மூன்றாம் பிரிவில் க. சுப்பிரமணியம், வே. ஆறுமுகம், வி. சின்னத்தம்பி என்பவர்களுமாகிய அறுவர் சித்தியடைந்தனர். இக்கல்லூரிப் பிரதம ஆசிரியரான நெவின் செல்லத்துரை அவர்களின் வழிகாட்டுதலின் கீழ்த் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றிய பதினாறு மாணவருள் இரண்டாம் பிரிவில் P. K. இராமசாமி ஐயர், G. குமாரசுவாமி, V. இரங்கையநாயுடு என்பவர்களும், மூன்றாம் பிரிவில் C. இலட்சுமிநாராயண ஐயர், M. பொன்னுச்சாமிப்பிள்ளை, P. A. சேஷாத்திரி ஆச்சாரி, S. N. கனகரத்தினம் என்பவருமாகிய எழுவர் சித்திபெற்றனர். இதன் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளெல்லாவற்றிலும் இந்துக் கல்லூரி தரத்தாலும் சித்திபெறும் விகிதத்தாலும் வருடா வருடம் முதன்மை பெற்று வந்தது. பிரதம ஆசிரியரான நெவின் செல்லத்துரை அவர்களுக்கு 1896 ஆம் ஆண்டு தொடக்கம் வருடச் சம்பளம் ஆயிரத்து ஒரு ரூபாவாக உயர்த்தப்பட்டது.

1896 (துர்முகி) சித்திரை மாதம் திரு. பசுபதிச் செட்டியார் அவர்கள் திருக்குற்றாலத்திலே இறந்த தமது சகோதரியின் துக்கத்திற்குப் போய்த் திரும்பி வரும்போது இந்துக்கல்லூரிக்கு B. A. பட்டம்பெற்ற இன்னுமொரு ஆசிரியர் தேவையாக இருந்தமையால், P.S சுந்தரம் ஐயர், B. A, L. T. என்பவரை அழைத்து வந்தார். கல்கத்தா புகுமுகத் தேர்வு வகுப்பில் கற்கத்தக்க மாணவர்கள் சிலரையும் தமிழ்நாட்டிலிருந்து அழைத்து வந்தார்.

(அடுத்த இதழில் தொடரும்)

(மாணவர் பகுதி)

# சைவசமய பாடம் - (4)

அன்புக் குழந்தைகளே,

சென்ற இதழில் பிரசுரமாகியிருந்த சைவசமயபாடத்தில், ஆணவம், மாயை என்னும் இரு பாசங்களைப் பற்றி விளக்கமளித்தோம், இவ்விதழில் கன்மம் பற்றி விளக்கப்படுகிறது. வாசித்துப் பயனடைக. அடுத்த இதழில் சந்திப்போம்.

— ஞானகுரு

மூன்றாம் பாடம் (தொடர்ச்சி)

## பாசங்கள்

### 3. கன்மம்

ஒரே குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சகோதரர்களிடையேயே - அதாவது ஒரே சூழலில் பிறந்து வளர்ந்தவர்களிடையேயே - ஒருவர் பல சிறப்புகள் பெற்று மகிழ்ந்திருப்பதையும் இன்னொருவர் வாழ்வு சிறப்புறாது துன்பமடைவதையும் காண்கிறோம். சிலரைக் கொடிய நோய்கள் தாக்குகின்றன. வாழ்வியலின் இந்த அனுபவத்திற்கான காரணம் என்ன என்பதற்குச் சைவம் விளக்கம் தருகிறது. இவ்வாறு அமைவதற்கு, ஆன்மாக்கள் செய்த - செய்து கொண்டிருக்கிற கன்மமே காரணம் என்பது சைவசித்தாந்தக் கொள்கை.

கர்மம் என்னும் வடசொல் கன்மம் எனவும் திரிந்து வழங்கும். கன்மம் என்பதன் பொதுவான பொருள் செயல். சமய நோக்கில் இச்சொல் செய்யப்படும் வினை, வினையின்பயன், வினைக்கான நியதி (சட்டம்) ஆகியவற்றைக் குறித்து நிற்கும்.

### வினையும் வினையின் பயனும்:

துளசித்தாமருடைய பிள்ளைக்கு ஏவலாளனுடைய பிள்ளை அடித்த பொழுது, அவருடைய மனைவி அடித்தவனைத் தண்டிக்கவேண்டுமென்று சொன்னாள். அவர் அவனை மன்னித்து மகிழ்விக்க வேண்டுமென்று சொன்னார். ஒரே காரியத்திலே இப்படி ஒன்றுக்கொன்று மாறாக இரண்டு பேர் ஏன் நினைத்தார்கள்?

துளசித்தாமருடைய மனைவியின் எண்ணம் என்னவென்றால், ''நாங்கள் மேலானவர்கள்; எங்களுடைய பிள்ளைக்கு ஏவலாளனின் பிள்ளை கை நீட்டலாமா?'' என்பது. ஆகவே அவளிடத்து அகந்தை மமதை என்ற குணங்கள் முனைத்து நின்றன. இந்தக் குணங்கள் ஆணவத்தினால் உண்டாவன. அவள் ஆணவத்தின் வழியில் நின்றாள்.

துளசித்தாமர் நினைத்ததாவது: ''கடவுள் ஒருவரே மேலானவர்; அவரால் படைக்கப்பட்டவர்களாகிய நாங்கள் எல்லோரும் அவருக்கு ஒரு தரத்தினரே; நாமும் அப்படியே எண்ணல் வேண்டும். கடவுள் ஏற்கத் தக்கதாக நாம் நடத்தல் வேண்டும்'' என்பது. ஆகவே, இவர் கடவுளுடைய திருவருள் வழியிலே நின்றார். இவர் திருவருள் வழியில் நிற்க, மனைவி ஆணவத்தின் வழியில் நின்றபடியால், இவர்களுடைய எண்ணங்கள் ஒன்றுக்கொன்று மாறாக இருந்தன. அவருடைய எண்ணம் நல்வினையான எண்ணம்; மனைவியின் எண்ணம் தீவினையான எண்ணம்.

இப்படியாக வினைகள் இரண்டு வகை. எது நல்வினை, எது தீவினை என்று பகுத்தறிதற்கு வழியென்ன? உலக இன்பங்களைக் கொடுக்கக்கூடியனவாய் ஆன்மாவைக் கெடுக்குஞ் செயல்கள் தீவினைகளாம். ஆசை, கோபம், பொறாமை, செருக்கு, நீதியீனம் முதலியவை தீவினைக் குணங்களாம். ஆணவத்தை அடக்கி ஆன்மாவை ஈடேற்றுஞ் செயல்கள் நல்வினைகளாம். கடவுட்பத்தி, அன்பு, நீதி, உண்மை, பொறுமை முதலியவை நல்வினைக் குணங்களாம். கடவுளுக்கும் மெய்யடியாருக்கும் செய்யப்படும் தொண்டுகளும் வழிபாடும் சிவநல்வினை அல்லது சிவபுண்ணியமெனப்படும். மற்றைய ஆன்மாக்களுக்குச் செய்யப்படும் நல்வினை பசு நல்வினை அல்லது பசு புண்ணியமெனப்படும்.

வினையானது மனம், மொழி, மெய் என்னும் மூன்றின் வழியாகச் செய்யப்படும். களவு செய்ய வேண்டுமென்று எண்ணுதல் மனத்தினாற் செய்யப்படும் வினை. களவு செய்யும்படி ஒருவனை ஏவுதல் மொழியினாற் செய்யபபடும் வினை. களவு செய்தல் மெய்யினாற் செய்யப்படும் வினை. (மெய் - உடம்பு)

ஒருவன் என்னை ஏசுகிறான்; அப்போது, ''என்னை இவன் ஏசலாமா? நான் இவனுக்கு அடிக்க வேண்டும்'' என்ற தீய எண்ணம் ஆணவத்தின் முயற்சியினால் உண்டாகிறது. அந்த எண்ணத்தை அடக்காவிட்டால் நமக்கு எத்தனையோ தீமைகள் உண்டாகும்.

முதலாவது:

நான் அவனுக்கு அடித்தால் அவன் எனக்கு அடிப்பான்; நமக்குக் கோபம் உண்டாகும்; கோபத்தினாலே கொலை முதலான பெரும் பிழைகள் செய்யவேண்டி நேரிடும்.

இரண்டாவது:

இன்றைக்கு என்னுடைய கோபம் ஒருவனிலே பலித்ததானால், நாளைக்குக் கோபம் இரண்டுபங்காக வரும்; ஆணவத்துக்கு இடங்கொடுத்தால் அது ஆன்மாவை நல்வழியிற் செல்லவிடாது.

மூன்றாவது:

கெட்ட செய்கைகள் அதிகமாகச் செய்து வந்தால், அந்தப் பழக்கமே கெட்ட செய்கையைப் பின்னுஞ் செய்விக்கும்; நாம் பிழையென்று நினைத்தாலும் நம்முடைய சொல்லுக்கமையாமற் சரீரம் செய்துவிடும். நமது நண்பர் ஒருவர் மாமிசஞ் சாப்பிடுதல் பாவச் செய்கை யென்று நன்றாக உணர்ந்து அதை விடவேண்டுமென்று தீர்மானித்தார். வீட்டிலே அது சமைக்கக்கூடாதென்று கட்டளையிட்டார். ஆயினும், அவருடைய

(14ம் பக்கம் பார்க்க)

# பாசங்கள்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

நண்பரொருவர் அவரையும் வேறு சிலரையும் ஒருநாள் விருந்துக் கழைத்தார்; அங்கே மாமிச போசனமும் தாவரபோசனமும் வெவ்வேறிடத்திலே வைக்கப்பட்டிருந்தன; இவர் மாமிசத்தைக் கண்டவுடனே வாயூறித் தம்முடைய தீர்மானத்தைப் பொருட்படுத்தாமல் மாமிசத்தையுண்டார். ''நீங்கள் ஏன் இந்த வேலையைச் செய்தீர்கள்?'' என்று அவருடைய சிநேகிதர் கேட்டபொழுது ''வாய் சொல்வழி கேளாதாம்'' என்று மறுமொழி சொன்னார். இப்படியாகச் சிலர் ஒரு செய்கையைப் பலமுறை செய்வதினால், அவர்களுடைய சரீரம் அவர்ளுடைய சொல்லைக் கேளாமல் வழக்கப்படி நடப்பதுண்டு. இயல்பாக மனம் தலைவனும், சரீரம் அடிமையுமாய் உள்ளன. ஒரு பழக்கத்தைப் பழகிவிட்டால் சில காலங்களிலே சரீரம் தலைவனாயும் மனம் அடிமையாயும் மாறி விடுகின்றன.

நாலாவது:

தீவினை செய்பவர்கள் அதற்காக இந்தப் பிறவியிலும் நரகங்களிலும் அடுத்த பிறவிகளிலும் வருந்துவார்கள். நெருப்பிலே கை வைத்தவனுக்குக் கை புண்ணாவது நிச்சயமாவது போல, தீவினை செய்தவர்களுக்குப் பலவகையான துன்பங்கள் உண்டாவது நிச்சயம்.

இப்படியல்லாமல், கோபம் வந்தபோது கோபத்தை அடக்கினால் மனத்திற்குச் சஞ்சலமில்லை. பின்னொருமுறை கோபம் வருகிறபொழுது அதை அடக்குவது இதிலும் பார்க்க எளிதாயிருக்கும்; ஆணவம் வலி குறையும். நாம் கோபத்தை அடக்கிவிட்டோமென்று ஒரு மகிழ்ச்சியுண்டாகும்; ஆன்மாவானது ஈடேறும். நல்வினையினால் இவ்வளவு நன்மைகளெல்லாமிருக்கவும், தீவினை செய்யப் புகுதல் பைத்தியச் செயலல்லவா?

இந்த நல்வினை தீவினைகளைக் கன்மம் என்று சொல்லுவர். ஒருவன் முற்பிறவிகளிலே நற்கன்மம் செய்திருந்ததால், இந்தப் பிறவியிலே அதற்குப் பலனாகிய இன்பத்தை அனுபவித்தற்கு மிகுந்த பொருள் கிடைக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். அவன் அந்தப் பொருளை மதுபானஞ் செய்தல் பிறருக்குத் தீங்கு செய்தல் முதலிய தீயகருமங்களிற் செலவு செய்கிறான்; அல்லது வறியவர்களுக்குக் கொடுத்து நல்ல கருமங்களைச் செய்து செலவிடுகிறான்; ஆகவே, முன்னே செய்த நற்கருமத்தின் பலனாகிய பொருளை அனுபவிக்கும் போது, மேலும் மேலும் நல்வினை தீவினை செய்கிறான். ஆகவே, பழைய வினையின் பயனை அனுபவிக்கும்போது புதிதாகவும் வினைசெய்கிறான். அனுபவிக்கப்படுகிற வினைக்குப் பிராரத்தம் என்று பெயர். அனுபவிக்கும்போது செய்யப்படும் புதிய வினைக்கு ஆகாமியம் என்று பெயர். ஆகாமியத்தை மேல்வினை, வருவினை எனவும் அழைப்பர். வினை செய்து முடிந்தாலும் அதன் பயன் முடியாமல் இருக்கும். நல்வினை, தீவினைக்கேற்ப வினையின் பலன் புண்ணிய பாவப் பதிவுகளாகப் பிறவிகள் தோறும் உயிரைத் தொடர்கின்றன.

இங்ஙனம் நாம் பல பிறவிகளில் செய்யும் வினைகள் சூக்கும (நுண்ணிய) நிலையில் குவிந்துள்ளன. இவ்வாறு அனுபவிக்கப் படாமல் எஞ்சியிருக்கிற வினைக்குச் சஞ்சிதம் என்று பெயர். சஞ்சிதத்தைத் தொகுவினை, தொல்வினை, பழவினை எனவும் அழைக்கலாம். சஞ்சிதத்திலிருந்து ஒரு பகுதியே அடுத்து வரும் பிறவியில் பலனுக்கு வருகிறது. மிகுதி அதன்பின் வரும் பிறவிகளில் பலனுக்கு வரும். பிராரத்தம் என்பது எடுத்த இப் பிறவியிலே அனுபவிக்கப்படும் வினை. (பிராரப்தம் என்னும் வடசொல் பிராரத்தம் எனத்திரிந்தது).

மேலே சொல்லப்பட்ட பசுவினைகள், சிவவினைகள் தவிர வேறொரு வகையான வினையுமுண்டு. அது ஆணவம் வலிகெட்ட காலத்திற் செய்யப்படும் வினை. ஒரு மாடு தாகத்தினால் தவிக்கும்போது ஒருவன் அதற்குத் தண்ணீர் கொடுக்கிறான். அவன் அந்தச் செய்கையை ''நான் செய்கிறேன்'' என்ற எண்ணத்தோடு செய்தால், அது மேலே சொல்லிய நல்வினையாகி, அவனுக்கு இன்பமாகிய பலனைக் கொடுக்கும். அதற்காக அவன் சில காலம் மறுமையிலே இன்பம் அனுபவிக்க நேரிடும். அவன் ''நான் செய்கிறேன்'' என்று எண்ணாமல் கடவுளுடைய திருவருள் செய்விக்கிறதென்று அந்தச் செய்கையைக் கடவுளுக்கு ஒப்புவித்துவிட்டால், அது நிலையற்ற உலக இன்பமாகிய பலனைத் தராமல், நிலையானதாகிய மோட்சத்துக்கு அவனைத் தகுதியுள்ளவனாக்கும். இப்படியான வினை நல்வினைகளுள்ளே மிகவும் மேலானது. இது பற்றில்லாத வினை எனப்படும்.

வெறுவினை என்று ஒருவகை வினையுமுண்டு. இது நல்வினை தீவினைகளிலே சேராதது. நூல் நூற்றல், கல்வெட்டுதல் முதலியவை வெறுவினைகளாம்.

ஆகவே, வினைகள்: பசுநல்வினை பசுத்தீவினை, சிவநல்வினை, சிவத்தீவினை, பற்றில்லாதவினை, வெறுவினை என அறுவகைப்படும்.

(அடுத்த இதழில் தொடரும்)

## வைத்தியநாதப் பெருமாளே

உரத்துறை போதத் தனியான-
உனைச்சிறி தோதத் தெரியாது;
பரத்துறை போலுற் றடியேனும்-
மலத்திருள் மூடிக் கெடலாமோ;
பரத்துறை சீலத் தவர் வாழ்வே-
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே;
வரத்துறை நீதர்க் கொருசேயே-
வைத்திய நாதப் பெருமாளே.

— திருப்புகழ்

## போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே

''பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித்தானை
எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை
எம்மானை என் உள்ளத்துள்ளே ஊறும்
அத்தேனை அமுதத்தை ஆவின்பாலை
அண்ணிக்கும் தீங்கரும்பை அரனையாதிப்
புத்தேளைப் புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே''.

—அப்பர் திருத்தாண்டகம்

# சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமிகளின் பிரசங்க மழை ஓய்ந்தபின், சுவாமிகளுக்குப் பக்கத்தில் சித்திரப்பாவை போல் அமர்ந்திருந்த பெரியார் அவர்கள் மெல்ல எழுந்து, தம்மை சுவாமியாகப் பாவித்துக்கொண்டு, பிரசங்க சாரத்தைத் திரட்டி, ஆங்காங்கு சேர்க்கவேண்டியவைகளை உரிய இடத்தில் சேர்த்து, 'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி' என்ற பாடலை நினைவுகூரத்தக்க வகையில் பாரிய கருத்துக்களைக் கடுகுப் பிரமாணத்தில் வழங்குவார்கள். 'சுவாமிகள் சொன்னார்கள்' என்ற வாய்ப்பாடு கிடையாது. சுவாமிகள் தமிழில் பேசுகின்றார்கள் என்ற எண்ணமே நிலவும். சுவாமிகள் திரு. சு. சி. அவர்களாய்த் தமிழில் பேசுகின்றார்கள் என்றே கூறலாம். ஆங்கில இரசிகர்கள் அத்தனை பேரும் அந்தத் தமிழ்ப் பிரசங்கத்தைக் கேட்டபின்புதான் எழுவார்கள். எத்தனையோ ஆங்கிலம் வல்லாருக்குச் சுவாமிகளின் பேச்சில் உள்ள அரிய கருத்துக்கள் அப்பொழுதுதான் தெளிவாகும். சிலருக்கு அது நல்லதொரு மீட்டற்பாடமாயிருந்தது''.

## சமய, சமூக சீர்திருத்தப் பணிகள்:

மேனாட்டாரின் பழக்கவழக்கங்கள் எமது சமூகத்திற் புகுந்து எமது சைவப் பண்பாட்டை அழிப்பதைக் கண்டு சைவப் பெரியார் பெரிதும் வருந்தினார். தமிழராகிய நாம் எமது பண்பாட்டைப் பின்பற்ற வேண்டுமெனப் பல துறைகளில் உழைத்தார். காலத்துக்கு ஒவ்வாத பழைய ஆசாரங்களையும் மூட நம்பிக்கைகளையும் அவர் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளவில்லை. கண்டித்தார்; எதிர்த்தார்.

ஆலயங்களில் உயிர்ப்பலி நடப்பதைத் தடுப்பதற்கு பெரியார் எடுத்துக்கொண்ட முயற்சி அளப்பரியது. உயிர்ப்பலி நடக்கும் ஆலயங்களுக்குப் பெரியார் போக மாட்டார்கள். அங்கு வழிபடவும் மாட்டார்கள். அவர்கள் முயற்சியால் உயிர்ப்பலியை நிறுத்திய ஆலயங்கள் பல. அவற்றுள் சிறப்பாக வழக்கம்பரை அம்மன் கோவிலைக் குறிப்பிடலாம். உயிர்ப் பலிக்கு மாறான உணர்ச்சியோடு வளர்ந்து வந்த ஒரு மாணவர் பரம்பரையை அவர் உருவாக்கினார். விக்ரோறியாக் கல்லூரியின் பணியாற்றிய காலத்தில், அக்கல்லூரியைச் சூழ்ந்த கிராமங்களையும் கிராம மக்களையும் சீர்திருத்தி, சைவசீலச் சிறப்புக்கு உள்ளாக்கிய பெருமை சைவப் பெரியாரையே சாரும். மிருகங்களைப் பலியிடும் ஈனச் செயலை ஒழித்தல், கோயில் விக்கிரகங்களுக்கு பொய்க்கால், கை வைத்துக் கட்டும் வழக்கைக் கைவிடல், தாதியர் நடனம் போன்ற நிகழ்வுகளை நிறுத்துதல் போன்ற் சீர்திருத்தங்களை மேற்கொண்டதுடன் பெரும் எண்ணிக்கையானோர் புலாலுணவைக் கைவிடவும் சமயதீட்சை பெற்றுக்கொள்ளவும் காரணமாகவிருந்தார்.

1929 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண வாலிபர் மாநாடு என்ற அமைப்பில் சேர்ந்து தீவிரமாகப் பணியாற்றினார். மாணவர் மாநாடு என்றழைக்கப்பட்ட இம்மாநாடு, தேசவிடுதலை, சமூக சீர்திருத்தம், கலாசார மறுமலர்ச்சி ஆகியவற்றை இலட்சியமாகக் கொண்டிருந்தது. எனினும் அரசியல், கலாசாரத்துறைகளிலே இம்மாநாடு ஆற்றிய பணிகளளவு பிரசித்தியை அதன் சமூக சீர்திருத்தப் பணிகள் அடையவில்லை. சைவப் பெரியாரைப் பொறுத்தவரை, அவர், இம்மாநாடு ஊடாகச் சமூகச் சீர்திருத்தத்திற்கே வித்திட்டார். சிறப்பாகத் தீண்டாமை ஒழிப்பிலேயே அவரது கவனம் தீவிரமாயிருந்தது.

1928 ஆம் ஆண்டு முதல் 1930 ஆம் ஆண்டு வரை சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிய சைவப்பெரியார் அவர்கள், இக்காலத்தில் - 1930 இல் - நடைபெற்ற யாழ்ப்பாண வாலிபர் சங்க மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். இம்மாநாடு திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலே நடைபெற்றது. அம் மாநாட்டில் சமாசனம், சமபோசனம் ஆகியனவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. திருநெல்வேலிச் சுற்றாடலில் வாழ்ந்த உயர்குடி மக்களின் பலத்த எதிர்பிற்கு மத்தியிலும், சைவப் பெரியாரோ மாநாட்டின் ஏனைய உறுப்பினர்களோ தமது முயற்சியில் சோர்வடையவோ பின்வாங்கவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வாலிபர் மாநாட்டுக் கூட்டத்தில் சைவப்பெரியார் ஆற்றிய தலைமையுரையின் ஒருபகுதி பின்வருமாறு;

''வருணாச்சிரம தர்மம் தொழிலை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. அதிலே தீண்டாமைக்கு இடமில்லை. யாழ்ப்பாணத்தில் சமூக சீர்திருத்தம் சம்பந்தமாக மூன்று கட்சிகளுள்ளன. நான் இந்த மூன்று கட்சிகளுடனும் தொடர்பு வைத்துள்ளேன். முதலாவது கட்சி வைதிக சைவருடையது. இவர்கள் மாற்றங்கள் யாவற்றையும் எதிர்ப்பவர்கள். இரண்டாவது கட்சி மிதவாதிகளை உள்ளடக்கியது. படிப்படியாக மாற்றங்களைக் கொண்டு வருவது இக்கட்சியின் கொள்கை. சைவவித்தியா விருத்திச் சங்கம் இக்கட்சியைச் சேர்ந்தது. மூன்றாவது கட்சி தீவிரவாதிகளைக் கொண்ட மாணவர் மாநாட்டைச் சேர்ந்தவர்களின் கட்சி. இக்கட்சியினர் மக்களோடு பழகி அவர்களிடையே பிரசாரம் செய்து அவர்களைத் தங்கள் கொள்கைகளை ஏற்கச் செய்தல் வேண்டும். இதற்குக் காலம் வேண்டும்.''

சைவப் பெரியாரின் நிலைப்பாட்டை இது தெளிவுபடுத்துகிறது. பாடசாலைகளில் சிறுபான்மைத் தமிழ் மாணவருக்குச் சமாசனம் வழங்கப்படல் வேண்டுமென அரசாங்கம் சட்டம் கொண்டு வந்தபோது சைவ வித்தியாவிருத்திச் சங்கம் அதற்குத் தன் முழு ஆதரவையும் அளித்தது.

ஆனால் சமயப் பிரச்சனைகளில் அரசாங்கம் தலையிடுவதை - சட்டங்கள் இயற்றுவதை - சைவப்பெரியார் தீவிரமாக எதிர்த்தார். இதில் அவர் எவ்வளவு தீவிரமாக இருந்தார் என்பதற்கு அவரின் பின்வரும் கூற்று சான்றாகும்.

''உயிர்க்கொலை புரிவதைச் சைவ சமயம் தடுக்கிறது உண்மையே ..... இப்படியான கொலை பாதகத்துக்கு அவர்கள் கர்மத்தினால் தண்டிக்கப் படுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை ..... இவ்வழக்கத்தை ஒழிக்க வேண்டுமெனச் சைவசமயிகள் பொதுவாக நினைத்தால் அதனை இணக்க முறையில் செய்ய வேண்டும். இந்த இணக்க முறையினால் இப்போது பல ஆலயங்கள் பலியிடும் வழக்கத்தை நிறுத்திக் கொண்டன...... இப்படிப் பட்டவர்களுக்கு நாம் அறிவுறுத்த வேண்டும். உண்மையினை உள்ள உள்ளவாறு உணரச் செய்யவேண்டும். இவ்வழக்கத்தை ஒழிப்பதற்குச் சட்டம் கொண்டுவரப்படுதலை நான் ஆதரிக்கமாட்டேன். சட்டம் கொண்டுவருவது ஒருவரது சமய அநுட்டானத்தில் தலையிடுவது போலாகும். கோவில்களிலே உயிர்ப் பலியை ஒழிப்பதற்கு மிக உக்கிரமாகப் பிரசாரம் செய்தவர்களில் நானும் ஒருவன். இப்போதும் இவ்வழக்கத்திற்கு நான் விரோதி. ஆனால் இவ்விடயத்திலே அரசாங்கம் தலையிட்டு, சட்டத்தைப் பிறப்பித்து அதன் மூலம் இப்பலியிடும் வழக்கத்தை ஒழிக்க முன்வருமானால் அதனைத் தடுப்பதில் எனது உயிரைத் தானும் தியாகம் செய்யப் பின் நிற்க மாட்டேன்''

(அடுத்த இதழில் தொடரும்)

# The Heritage of the Tamils : Saivaism - IV

— *Kalakeerthi* Prof. Pon. Poologasingham, D. Phil. (Oxon) —

(Continued from Book 112 No 9)

Some say "religion is a way of life". Does it mean that out of the many ways of living, religion is one? Does it signify only the way of life of the hermits who have renounced worldly pleasures? Or has it narrowed down religion to practices or observances alone? Religious practices and observances in related cultures tend to behave similarly signifying that they cannot on their own distinguish one religion from the other. Some of the others say "religion is a guide to God". Isn't there any need to encompass anything else but rituals and rites because these are said to guide us to God? Religion is said to be the provider of the necessary means to remove our ignorance to enjoy heavenly bliss in the presence of God. Religious practices and observances, rites and rituals and thoughts of the unknown other life do have a role in religion. But singly or totally they do not bring out the essence of religion. Religion is something which provides people with a sense of belonging, answers the question of why we are here and fulfils that spiritual need of being safe somewhere in the universe.

The essence of a religion has to be seen in its philosophy. The whole gamut of a religion comes out in its philosophical thoughts laid by its thinkers. Without a philosophical system one cannot be a religion. Saivaites have a philosophy of their own called Saiva Siddhanta which raises questions from a logical stance and answers them in a way acceptable to common sense.

Those adherents of the Vedas, who try to force down the throats of the Saivaites their Vedic traditions as fundamental to Saivaism, cannot produce any proof for their theory. Saiva traditions, holding Saiva agamas alone as the primary source of their "established truth" Saiva Siddhanta, consider the Vedas as "Purva paksa" meaning general religious texts of introductory nature which consist of theories refuted by Saiva Siddhanta.

Saivaities are expected to adhere to the maxims of their Canons in all their religious practices and observances. Their officiating priests too have to follow the Saiva Canons in their rites and rituals. However, the priests of the Brahminic fold, especially the smartas who follow Sankarar's Vedic interpretations, stood out markedly against the Saiva Canons in favour of the Vedas. Then influential position thwarted all attempts for precedence of Saiva Canons among the Saivaites in Tamilnad As a result Saiva agamas lost their importance in Saivaism. The anti Brahminic upsurge brought about by the western educated in the 19th century, reactivated interest in the Saiva agamas and Saiva Siddhanta.

(to be continued)

## O Lord Vaidheeswara!

Alas, alas, I have wasted many, many days, not hailing
Him of Pullirukkuvelur! He is the Lord whom Devas
Hail with a thousand names; unto the servitors who part not
From Him, He secures the wealth of salvation; becoming
Mantra, Tantra and Medicine too. He cured the malady--
Well-nigh impossible to cure; He is the martial One who held
The strong bow with which He gutted with fire
The triple, hostile towns.

— Appar Thiruththandakam
(Sixth Thirumurai)

## Saivaism

* "Among the many revelations that Mohenjadaro and Harappa have in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivaism has a history going much to the chalcolithic age or perhaps even further still, and that it takes place on the most ancient living faith in the world." — Sir John Marshall
* "Saivaism is the oldest prehistorian religion of South India, essentially existing from pre-Aryan times."
* "The Saiva Siddhanta Philosophy is the Choicest product of the Dravidian intellect. It is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all religions of India. It is peculiarly the South Indian and Tamil Religion."

Dr. G. U. Pope in 'Thiruvacagam'

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K. K. S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K. K. S. Road, Jaffna. 28-01-2002 (Fullmoon Day).